பரிசுத்த பவுல் ஆலயம்

# அஹமதி தமிழ் திருச்சபை

"தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே"

ரோமர் 11:29

## 2018
## ஜூலை மாத செய்திமலர்

இதழ் : 3
மலர் : 15

# கடந்த மாதத்தில் சபையில் .......

















# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே. கடந்த ஜீன் மாதம் முழுவதும் நம்மை வழிநடத்தின தேவன் வரும் ஜீலை மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவார்.

தேவன் நம்மை தமது பிள்ளைகளாக தெரிந்து கொண்டிருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம். நாமும் அவரை இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தேவனுக்கும் நமக்கும் தகப்பன் பிள்ளை என்ற உறவு காணப்படுகிறது இதைவிட பெரிய ஆசீர்வாதம் இந்த உலகத்தில் வேறென்ன இருக்கப்போகிறது? பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

**“தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறதவைகளே”** (ரோம–11:29) என்று.

பிரியமானவர்களே, தேவன் நம்மை பிள்ளைகளாகத் தெரிந்து கொண்டிருப்பதன் நோக்கமே அவரது சாட்சியாக பிறருக்கு கனி கொடுக்கிற வாழ்வு வாழ்ந்து ஆண்டவரை வெளிப்படுத்த வேண்டுமென்பதே. “நீங்கள் என்னை தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களை தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்ளுவது எதுவோ அதை அவர் உங்களுக்கு கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டுமென்று இவைகளை உங்களுக்கு கற்பிக்கிறேன்”. (யோவா–15:16,17) நான் உன்னை பெயர் சொல்லி அழைத்து நீ என்னையறியாது இருந்தும் உனக்கு நாமம் தரித்தேன். (ஏசா–45:4)

இனி கீழ்வரும் பகுதிகளில் தேவ மனிதர்களை எவ்விதம் அழைத்தாரென்றும் அவர்களும் கர்த்தரை எப்படி தெய்வமாக தெரிந்துகொண்டார்கள் என்பதையும் பார்ப்போம்.

## 1.பேதுரு.........

ஒருமுறை இயேசு சீஷரை நோக்கி மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும் அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் யாரென்று சொல்லுகிறீர்கள் என்றுக் கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்திரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். அதற்கு இயேசு மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா

இதை உனக்கு வெளிப்படுத்தினார். இதை சொல்லிவிட்டு சபைக்கட்டப்படும் ஊழியத்தை அவனுக்கு அழைப்பாக கொடுப்பதை வெளிப்படுத்தினார். (மத்-16: 13-20)எத்தனை மகிமையான காரியம் பாருங்கள்.

நாமும்கூட ஆண்டவரை இரட்சகராக கண்டு கொண்டிருப்பது ஏதோ மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் அல்ல. தேவனுடைய சித்தத்தின்படியே ஆண்டவரை இரட்சகராக கண்டுகொண்டிருக்கிறோம். நமக்கும் சபையை கட்டுகிற அழைப்பை தேவன் உறுதி படுத்தியிருக்கிறார். ஆண்டவரின் நாமத்தில் கட்டப்படும் சபையை பாதாளத்தின் வாசல்கள் ஒருபோதும் மேற்கொள்வதில்லை. அல்லேலூயா.

## 2. எரேமியா......

கர்த்தர் எரேமியாவை நோக்கி நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் என்றார். அவனோ ஆ கர்த்தராகிய ஆண்டவரே இதோ நான் பேச அறியேன் சிறு பிள்ளையாக இருக்கிறேன் என்றார். அப்போது கர்த்தர் நீ பயப்பட வேண்டாம் உன்னை காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன். உன்னை இன்றைய தினம் அரணிப்பான பட்டணமும் இருப்புத் தூணும் வெண்கல அலங்கமுமாக்கினேன் என்று சொல்லி பெரிய தீர்க்கதரிசயாய் அழைத்தார்.
(எரேமி-1:1-19)

ஆம் பிரியமானவர்களே, தகுதியில்லாத நம்மையும் தாயின் கர்ப்பத்தில் உருவாகுமுன்னே தெரிந்து கொண்டு பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். நம்மை கொண்டு அவர் செய்ய நினைக்கும் மகிமையின் காரியங்கள் மகத்துவமானவைகள். அவர் சித்தத்தை செய்வதற்கு நம்மை ஒப்புக்கொடுப்போமா? எரேமியாவோடு துனை இருந்த கர்த்தர் நம்மையும் காக்கும்படிக்கு எப்போதும் நமக்குத் துணையிருப்பார் ஆமென்.

## 3.கிதியோன்......

மீதியானியரிடமிருந்து இஸ்ரவேல் மக்களை பாதுகாப்பதற்காக கிதியோனை தளபதியாக கர்த்தர் தெரிந்துகொண்டார். அவனைப் பார்த்து அவர் சொன்னார் பராக்கிரமசாலியே நான் உன்னோடே இருக்கிறேன் என்று. அவன் சொன்னான் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன்? என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் நான் சிறியவன் என்றான். அதற்கு கர்த்தர் நான் உன்னோடேகூட இருப்பேன் என்றார். ஒரே மனுஷனை முறியடிப்பதை போல நீ மீதியானியரை முறியடிப்பாய் என்றார். அவர் சொன்னது போலவே வெறும் 300 பேரைக் கொண்டு திரளான மீதியானியரை முறியடித்து ஜெயம் பெற்றான். (நியாதி-6:11-7:25) அல்லேலூயா.

இது போல நாம் நினையாத கோணத்தில் கர்த்தர் கிரியை செய்து எளிமையான நம்மைக்கொண்டு மகத்துவமான காரியங்களை செய்ய ஆண்டவர் வல்லமை பொருந்தியவராக இருக்கிறார். கிதியோனை அழைத்த தேவன் நம்மையும் அழைத்திருக்கிறார். பிசாசின் கிரியைகள் யாவையும் அழித்து மாம்சத்தின்

கிரியைகளை ஒழித்து பரிசுத்த தேவனின் பிள்ளைகளாக வாழ்வதற்கு நம்மையும் ஆண்டவர் அழைக்கிறார். நாம் ஒப்புக் கொடுப்போமா?

## 4.மோசே...

ஆடு மேய்த்துக்கொண்டிருந்த மோசேயை பெயர் சொல்லியழைத்து "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன். என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன்" என்றார். அப்போது மோசே "ஆண்டவரே இதற்கு முன்னாவது தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்கு பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல. நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன்" என்றான். அப்பொழுது கர்த்தர் "நீ போ நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்" என்று சொல்லி இஸ்ரவேல் சபையை கானானுக்கு வழி நடத்தும் மேய்ப்பனாக அழைத்தார். (யாத்–3,4)

பிரியமானவர்களே, தகுதியில்லாதவர்களை அழைத்து தகுதிபடுத்துகிறவர் நம் தேவன். மோசேயைப் போலவே நம்மையும் எவ்வளவு மகத்துவமான காரியங்களை செய்ய ஆண்டவர் கிருபை பாராட்டியிருக்கிறார். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற குடும்பம், பெற்றோர், இன ஜன பந்துக்கள், வேலை, பொருளாதாரம், கௌரவம், கல்வி, அறிவு, தாலந்துகள், வசதி வாய்ப்புகள், தேக ஆரோக்கியம் இன்னும் எத்தனை எத்தனையோ. நன்றியறிதலுள்ள இருதயத்தோடு தேவனுக்கு பணி செய்திட நம்மை அர்ப்பணிப்போமா?

## 5.பவுல் அப்போஸ்தலன்....

அறியாமல் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்த பவுலுக்கு ஆண்டவர் தரிசனத்தின் மூலமாய் தன்னை வெளிப்படுத்தினார். அவன் நடுங்கி திகைத்து ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான். அப்பொழுது கர்த்தர் தம்முடைய ஊழியத்தை மிகுந்த பாடுகள் மத்தியிலே நிறைவேற்றி உலகமெங்கும் தமது மகிமையின் சுவிசேஷத்தை அறிவிக்கிறதற்காக தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம் என்பதை வெளிப்படுத்தினார். புதிய ஏற்பாடு முழுவதும் பவுல் எழுதின நிருபங்கள் வல்லமையான தேவ செய்தியையும் அநேக ஆவிக்குரிய மறைப்பொருட்களையும் இன்று வரை மனுமக்களுக்கு சொல்லிக்கொண்டிருக்கிறது. (அப்–9:1–15)

பிரியமானவர்களே, எங்கோ ஆண்டவரை அறியாமல் வாழ்ந்துகொண்டிருந்த நம்மை கிருபையாய் ஆண்டவர் அழைத்து தம்மை வெளிப்படுத்தி இரட்சித்து அவர் பிள்ளையாய் வாழ வைத்து அநேகருக்கு ஆசீர்வாதத்தை தரக்கூடிய கனியுள்ள வாழ்க்கையை ஆண்டவர் நமக்கு ஈவாக தந்தருளியிருக்கிறாரே கர்த்தருக்கே ஸ்தோத்தரங்களை செலுத்துவோம். ஆமென்.

கர்த்தர் தாமே வரும் ஜீலை மாதம் முழுவதும் நம்மை கரம்பிடித்து நடத்துவாராக. நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். இந்த உலக வாழ்க்கையிலும் நம்மை பாதுகாத்து வழுவாதபடிக்கு நம்மைக் கரம் பிடித்து

மரணபரியந்தம் நம்மை நடத்தி நித்திய ஜீவனை நமக்கு அருள் புரிவாராக. நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை தேவனுக்கு உகந்த காணிக்கையாக அர்ப்பணிப்போம். அவருடைய அழைப்பின் நோக்கத்தையும், திருவுள சித்தத்தையும் கூர்ந்து நோக்கி தேவனுக்கு மகிமையாக வாழ்வோமாக.

நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும் நீதிபரரை தரிசிக்கவும் அவருடைய திருவாய்மொழியை கேட்கவும் அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார். (அப்–22:14)

கர்த்தருடைய கிருபை உங்கள் ஒவ்வொருவரையும் காத்து வழி நடத்துவதாக,

கிறிஸ்துவின் பணியில்
**அன்பு சகோதரன்**
**சகோ.ஸ்டாலின்**

# தேவசெய்தி

## உன்னை நடத்துகிற தேவனாகிய கர்த்தர்

**"இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது, பிரயோஜனமாயிருக்கிறதை உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே"** ஏசா : 48:17

நீதியின் வழி, சமாதானத்தின் வழி, பரிசுத்தத்தின் வழி என பல வழிகளைப்பற்றி வேதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த மாதம், தேவன் நமது வலது கையைப் பிடித்து 'இது தான் வழி இதிலே நட' என்று ஒரு குறிப்பிட்ட வழியில் நம்மை நடத்திச் செல்ல விரும்புகிறார்.

"பார்வோன் ஜனங்களைப் போக விட்ட பின்பு, ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனம் மடிந்து எகிப்துக்குத் திரும்புவார்களென்றுச் சொல்லி, பெலிஸ்தரின் தேச வழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாக நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வானாந்திர வழியாய் ஜனங்களை சுற்றிப்போகப்பண்ணினார்" (யாத்: 13:17–18)

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் கர்த்தர் இஸ்ரவேலரை எல்லா பாடுகளிலிருந்தும், அடிமைத் தனத்திலிருந்தும் மீட்டெடுத்து, பாலும் தேனும் ஓடுகிறதான கானானைக் கொடுத்து அவர்கள் வாழ்வை செழிப்பாய் மாற்ற விரும்பினார். ஆகையால், அவர்கள் பெலிஸ்தரின் தேசத்து வழியாய்க் கானானுக்குச் சென்றால் இரண்டு வாரங்களே ஆகும் என்றாலும், மாறாக தேவன் அவர்களைச் **சுற்றுவழியில்** நடத்திச் சென்று 40ஆண்டுகளுக்குப் பிறகு கானானுக்குள் பிரவேசிக்க செய்தார். இதன் மூலம், தேவன் அவர்கள் மேல் வைத்திருந்த **பிரியத்தையும்,**

**நோக்கத்தையும்** வெளிப்படுத்தினார். அவர்கள் எகிப்தின் இராணுவத்தைக் கண்டால் பயந்து மனமடிவடைந்து எகிப்திற்கு திரும்பி விடுவார்கள் என்று தேவனறிந்து, அவர்களை யுத்தமில்லாத பாதையில் நடத்திச் சென்று, அவர்கள் மேல் தான் வைத்திருந்த பிரியத்தையும், நேசத்தையும் வெளிப்படுத்தினார். இரண்டாவதாக, தம்முடைய நோக்கத்தை நிறைவேற்ற விரும்பி, அவருடைய வல்லமையை வெளிப்படுத்தி, அவர்களுக்குத் தாழ்மையைக் கற்றுத்தந்து, அவர்களை நொறுக்கி, அவர்கள் சுபாவங்களை மாற்றி, அவர்கள் வழிகளையும், சிந்தனைகளையும் சீர்ப்படுத்தி, அவர்கள் தங்கள் இலக்கை நோக்கி ஓட ஆயத்தப்படுத்தினார்.

பிரியமானவர்களே! ஒருவேளை தேவன் நம்மை இந்த மாதம் சுற்று வழியில் நடத்திச் செல்வாரானால் சோர்ந்துப் போக வேண்டாம். பாதை கரடு, முரடாயிருக்கலாம், ஆசீர்வாதங்கள் தாமதமாகலாம். ஆயினும் அவர் நம்மை உருவாக்கிச் சீர்ப்படுத்தி நிலை நிறுத்தும் படி, அவரு டைய கரத்தில் நம்மை ஒப்புக் கொடுத்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோமாக.

## 2.வேறுவழி (Re-directed Way):

**" பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போனார்கள் " (மத் : 2:12)**

இயேசுக்கிறிஸ்து பாலகனாய்ப் பிறந்த போது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் அவரைப் பணிந்துக் கொள்ளவந்து, ஏரோது ராஜாவிடம் பிள்ளைப் பிறந்த இடத்தைக் குறித்து விசாரித்தனர். ஏரோது பொறாமைக் கொண்டு, சாஸ்திரிகளை அழைத்துத் தானும் இயேசுவைப் பணிந்துக் கொள்ள விரும்புவதாகக் கூறி, இயேசு பிறந்திருக்குமிடத்தைத் தெரிந்துக் கொண்டு தனக்கு அறிவிக்கும்படிச் சொன்னான். சாஸ்திரிகளோ, சொப்பனத்தின் வாயிலாக தேவ எச்சரிப்புப் பெற்று, ஏரோதிடம் செல்லாமல், தேவனால் வேறு வழியாய் அனுப்பப்பட்டனர். இப்படிதான், தேவன் நம்மையும் சில நேரங்களில் நாம் சென்றுக் கொண்டிருக்கிற பாதையை மாற்றி, நம்மை வேறு வழியில் நடத்துவார். அவர் எச்சரிப்புக்கு நாம் கீழ்ப்படிந்து நடந்தால், அவர் **ஆலோசனையும்,** பாதுகாப்பும் நமக்கும் கிடைக்கும் என்பதில் சந்தேக மில்லை. நமக்கு, அதிக ஞானம், கல்வி, செல்வாக்கு இருக்கலாம், ஆனாலும், நம் சுயப்புத்தியின் மேல் சாயாமல், தேவனுக்குச் செவிக்கொடுத்துச் செயல்படும்போது நாம் வெற்றிப்பெறுவது நிச்சயம்.

(2 சாமு 5: 17-25) இங்கு தாவீது பெலிஸ்தரோடு யுத்தம் பண்ணப் போகும் போது, தேவ ஆலோசனையைக் கேட்டு,அதன் படி நடந்த போது, முதலில் நேர்வழியிலும் பிறகு வேறு வழியிலும் நடத்தப்பட்டார். அதனால் கர்த்தர் முன்பாகச் சென்று அவருக்காக யுத்தஞ்செய்தார்.

பிரியமானவர்களே! தேவன் நம்மை இந்த மாதம் நாம் தெரிந்துக்கொள்ளும் வழியின் படியல்லாமல் வேறு வழியில் நடத்துவாரானால், தாவீதைப்போல அவர்

ஆலோசனையைக் கேட்டு நடப்போம், அப்பொழுது தேவன் நமக்காகவும் யுத்தஞ்செய்வார்.

## 3. புதியவழி (Renewed Way):

**" அப்பொழுது கர்த்தர் அவனைப்பார்த்து, நீ தமஸ்குவின் வழியாய் வனாந்திரத்திற்குத் திரும்பிப்போய் ஆசகேலை சீரியாவின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானாகிய எலிசாவை உன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு " என்றார். (1இராஜா:19:15-16)**

எலியா ஊழியத்திலே சோர்ந்துப்போய், தான் சாக வேண்டுமென்று கர்த்தரிடத்தில் கேட்டான். ஆசகேலை சீரியாவின் மேல் ராஜாவாக்க வேண்டும், யெகூவை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்க வேண்டும், எலிசாவை தன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக ஏற்படுத்த வேண்டும் என்று தேவன், தனக்கு வைத்திருந்த முக்கியமான ஊழியங்களை அறியாமல் பேசினான் ஆகவே, தேவன் அவனைப் பார்த்துச்சொன்னது, " நீ செய்ய வேண்டிய பிரயாணம் வெகுதூரம்".

ஒரு வேளை நீங்களும், உங்கள் வீட்டுக்காரியங்களிலோ, வேலையின் காரியத்திலோ (அ) ஊழியத்தின் காரியத்திலோ, சந்திக்கிற போராட்டங்களினி மித்தம் சோர்ந்துக் காணப்படலாம். தேவன் உங்களைப் பார்த்துச் சொலலுகிறார், "நீ உன் வேலையை அறிந்து செயல்படு, தாலந்துகளை வெளிப்படுத்து, உனக்கு ஒரு புதிய வழியைக் காட்டுவேன் ".

மேலும் எலியா, தேவன் தனக்குள் வைத்திருந்த அபிஷேகத்தை உணராமல் தேவனை நோக்கி, " சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக நான் வெகு பக்திவைராக்கியமாக இருந்தேன் "என்று தன் பெருமையை சொல்லிக் கொண்டான். அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். ஆகவே தேவன் நமக்குள் வைத்திருக்கும் விசேஷித்த அபிஷேகத்தையும், தாலந்துகளையும் உணர்ந்தவர்களாய், தேவன் நமக்குக் காட்டும் புதிய வழியிலே நடந்து, தேவனுக்கென்று மகிமையான ஊழியஞ் செய்யவோமாக!.

ஆம் பிரியமானவர்களே! இந்த மாதம் தேவன் நம்மைச் சுற்று வழியிலும், வேறு வழியிலும், புதிய வழியிலும் நடத்திச் சென்று ஆசீர்வதிக்க விரும்புகிறார். அவருடைய வழி நடத்துதலுக்கு, நாம் நம்மை ஒப்புக் கொடுத்து, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோமாக!. ஆமென்! அல்லேலூயா!!.

கிறிஸ்துவுக்குள்
சகோதரி.பிரியா பிரேம்குமார்

# மிஷனெரிச் செய்திகள்

**பகத் சிங் (1903–2000)**

ஆசியாவிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆவிக்குரியத் தகப்பனாகவும், விசுவாசிகளின் மாதிரியாகவும் விளங்கியவர் பகத் சிங். பஞ்சாபின் சீக்கிய குடும்பத்தில் பிறந்த இவர், இங்கிலாந்து சென்று பொறியாளர் படிப்பை முடித்தார். 1929–ஆம் ஆண்டு உலகப்பிரகாரமான வாழ்வில் உன்னத நிலையை அடைந்தார். கிறிஸ்து உள்ளத்தில் வர புது சிருஷ்டியானார். சீக்கிய மதப் பெற்றோர் அவரை பம்பாயில் விட்டு விட்டுத் தங்கள் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தனர்.

தன் ஜீவனையும், தனக்கு அன்பானவர்களையும் விட மேலாக கர்த்தரையே நேசித்ததால், கர்த்தருடைய வார்த்தையே அவருக்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் மாறினது.

பம்பாயில் தன் ஊழியத்தை ஆரம்பித்த பகத்சிங், பின்னர் பஞ்சாபிலும், கராச்சியிலும் ஊழியத்தைத் தொடர்ந்தார். குறுகிய காலத்திற்குள் தேவன் அவரை உயர்த்தினார். ஒரு மாதத்தில் மட்டும் 400–க்கும் மேற்பட்ட இடத்திலிருந்து சுவிசேஷப் பணிக்கு அழைப்பு வந்தது. அவரின் ஊழியத்தின் பயனாக ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவைக் கண்டு கொண்டனர்.

சென்னையில் கால் பதித்த அவர் "யேகோவா ஷம்மா" என்ற சபையை 1941–ம் ஆண்டு ஆரம்பித்தார். இச்சபை விரைவாக வளர ஆரம்பித்தது. இந்தியாவின் பல பாகங்களிலும், பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் பல நாடுகளிலும் ஆயிரக்கணக்கான சபைகள் உருவாகின. ஆண்டவர் சகோதரரை அற்புதமாகப் பயன்படுத்தினார்.

வேத வாசிப்பும், ஜெபமும் ஆழ்ந்த விசுவாசமும் இவரது வெற்றிக்கு காரணங்களாயின. விசுவாசிகளுக்கு மத்தியில் ஐக்கியத்தை நிலைப்படுத்த அன்பின் விருந்தை ஆரம்பித்த இவர் ஓர் அன்பின் ஊழியராகவே வாழ்ந்து தன் ஓட்டத்தை முடித்தார்.

கிறிஸ்து என் ஜீவனாயிருக்கையில் அவரில்லாமல் நான் எப்படி ஜீவிக்க முடியும்

பகத்சிங்

கிறிஸ்துவின் பணியில்,
சகோ.சுகுமாரன்

# இந்த மாதம் பிறந்த நாள் காண்பவர்கள்

சகோ.ஸ்டீதர்
செல்வி.ரெஜினா ராமமூர்த்தி
செல்வன்.ஜோஸப் பிரின்ஸ் பால்ஜெகநாதன்
செல்வன்.ஏனோக் ஜோன் மார்க் அந்தோணி
செல்வி.கீதா மகேஷ் ராஜ்
செல்வன்.டெலின் ஜெர்வின் பிராக்லின்
சகோதரி.பெல்வியா ஜெரின்
செல்வி.அபியா ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஸ்நேகா எபநேசர்
சகோதரி.மேகலா ஆஸ்டீன்
சகோதரி.அஸ்வினி டினேஸ்
செல்வன்.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வி.ஜீயோனா ஸோரன் செல்வசிங்
சகோதரி.ஏஞ்ஜலீனா மணிராஜ்
செல்வன்.ஸப்பரின் தீமோதி செல்வகுமார்
சகோ.சத்தியநாதன்
சகோதரி.பாவனி ஆரோக்கியராஜ்
செல்வி.வென்பா ஜாயிஸ் பிரியா ரவி ஜான்பீட்டர்
செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்
சகோ.தாமஸ்

சகோ.சதீஸ் குமார் எத்திராஜ்
சகோதரி.ஜெபராணி தர்மர்
சகோ.தாஸ்
செல்வன்.மெல்வீன் சாம் சாமுவேல் தாசையா
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
செல்வி.ஜோஸ்பின் அந்தோணிசாமி
செல்வி.ஜெர்ஷன் டேனியல் ஜெஸ்லீன்
செல்வி.ஹாணி ஹர்ஸிதா வெங்கடேஷ்
சகோதரி.கலா விஜீ நடராஜன்
சகோதரி.தெய்வசொருபி கமலதாசன்
சகோ.ஸ்டாலின்
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோ.எல்ஜின்
சகோ.வின்செண்ட் ஸ்விட்
செல்வன்.கபிலன் பால் புருஷோத்தமன்
செல்வி.லீனா வில்கின்ஸ்
சகோதரி.ஹெப்ஸிபா பாமா சாம் ஆனந்த்
சகோதரி.சாந்தி ஜெயசேகர்
சகோ.அசோக் குமார்
செல்வன்.சைமன் ஜெயக்குமார்
சகோ.ஸ்டீபன் ஜெயக்குமார்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்"

ஆதி 12:2

# இந்த மாதம் திருமண நாள் காண்பவர்கள்

திருமதி & திரு. பாண்டியன்
திருமதி & திரு. பக்தராஜ்
திருமதி & திரு.ஜோன்செல்வசிங்
திருமதி & திரு.அசோக்குமார்
திருமதி & திரு. முத்தையா

திருமதி & திரு.சதீஸ் குமார்
திருமதி & திரு.ஜெஸ்டீன்
திருமதி & திரு.வர்கீஸ்
திருமதி & திரு.ரிச்சர்ட் டேனியல்

# 2018 ஜீலை மாத நிகழ்வு அட்டவணை

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/07/2018 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ.சுகுமார் |
| 08/07/2018 | சகோ. பால் பாண்டியராஜ் | சகோ. பிரசாத் |
| 15/07/2018 | சகோ. ஸ்டாலின் | சகோ.ஆரோக்கியதாஸ் |
| 22/07/2018 | சகோ. டேவிட் | சகோ. தாமஸ் |
| 29/07/2018 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. ஆசீர்வாதம் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/07/2018 | சகோ.ஜெயபிரகாஷ் | சகோ.பால் ஜெகநாதன் |
| 13/07/2018 | சகோ.வேலு ராமர் | சகோ.அற்புதராஜ் |
| 20/07/2018 | உபவாச திருவிருந்து | |
| 27/07/2018 | சகோ. ஐசக்துரை | சகோ. கிறிஸ்டோபர் |

**04–07–2018 மாதந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை**
**நேரம் : மாலை 6:30, இடம் : பாஹீல் ஜெபவீடு,**
**(சகோதரி : ஜீவி வேதானந்தம் இல்லம் சார்பாக)**

**05/07 /2018 அன்று மாலை முதல் காலை வரை**
**சங்கிலி தொடர் ஜெபம்**

**12/07 /2018 அன்று முழு இரவு ஜெபம்**
**(இடம்: பரிசுத்த பவுல் ஆலயம், நேரம் : இரவு 10 மணி முதல் காலை 2:00 மணிவரை)**

**27/07/2018 மாதாந்திர வாலிப ஐக்கிய கூடுகை**
**நேரம் ( மாலை 6:30 முதல் 8:30 வரை)**
**இடம் : பாஹீல் ஜெபவீடு, வேத வினா பகுதி II கொரிந்தியர்**

# ஜீலை மாதத்திற்கான வேத வினா

(யாத்திராகமம் பகுதியில் இருந்து)

1.எகிப்தின் ராஜா எபிரேய மருத்துவச்சிகளிடத்தில் சொன்னது என்ன? அதற்கு அவர்கள் செய்தது என்ன?

2.கர்த்தர் மோசேயினிடத்தில் முதலில் பேசி கொடுத்த கட்டளை என்ன?

3.மோசேயினிடத்தில் கர்த்தர் ஏன் கோபங்கொண்டார்?

4.பார்வோன் எதினால் மனம் மாறினான்?

5.கர்த்தர் எகிப்தில் கொடுத்த வாதைகள் யாவை?

6.பார்வோன் ஏன் இஸ்ரவேலரை பின் தொடர்ந்தான்?

7.இஸ்ரவேலருக்கு கர்த்தர் செய்த அதிசயம் என்ன?ஏன் கர்த்தரை புகழ்ந்து பாடினார்கள்?

8.இஸ்ரவேலர் எதற்கெல்லாம் ஆரோனுக்கு எதிராக முறுமுறுத்தார்கள்?

9.மோசே ஆரோனிடத்தில் கோபம் கொண்டது ஏன்?

10.பரிசுத்த ஸ்தல வேலைகளுக்கு கர்த்தரால் ஞானம் பெற்றவர்கள் யார்?

11.உடன்படிக்கை பெட்டியை உண்டாக்கியவன் யார்? அதின் அளவு என்ன?

12.ஆசாரிப்புக் கூடாரத்திற்கு இஸ்ரவேல் ஜனங்கள் கொடுத்த பொருட்கள் என்ன?

13.கர்த்தருடைய மகிமை எப்படி எதை நிரப்பிற்று?

14.இஸ்ரவேல் ஜனங்களுக்கு இரவும் பகலும் எது துணையாக நின்றது?

15. இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை எப்படி பதித்தார்கள்?

(விடைகளை யாத்திராகமம் பகுதியில் தேடவும், பதில்களை ஆதார வசனத்துடன் எழுதி செய்தி மலர் பொறுப்பாளர் சகோ.ஐசக்துரை அவர்களிடம் நேரிடையாகவே அல்லது வாட்ஸ்அப் மூலமாகவே 20-07-2018 க்குள் கொடுக்கும் படி கேட்டுகொள்கிறோம்)



## விசுவாசிகள் கவனத்திற்கு

கடந்த மாதம் தேர்வு எழுதியவர்களின் பெயர்களும் மற்றும் கேள்விக்கான விடைகளும் தவிர்க்க முடியாத காரணத்தினால் தற்போது வெளியிடப்படவில்லை. அடுத்த மாத செய்திமலரில் வெளியிடப்படும் என்று தயவாய் கேட்டுக் கொள்ளுகிறோம்

# மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்

– லூக்கா 3:8

யோவான் ஸ்நானன் சொல்கிறார் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான். இன்றைக்கு அநேக விசுவாசப் பிள்ளைகள் சபைகளிலே ஞானஸ்நானம் எடுத்தும் மனந்திரும்பவில்லை. எப்படியென்றால் காணிக்கை என்ற கனிகளை தருகிறார்கள். துதி பாடல், ஆராதனை, ஜெபம் என்ற கனிகளை தருகிறார்கள். ஊழியரை உபசரிப்பது மற்றும் விழாக்காலங்களில் கிறிஸ்மஸ், ஈஸ்டர், நல்ல வெள்ளி, புது வருட ஆராதனை போன்ற விழாக்காலங்களில் ஆலயத்தில் பொருட்கள மற்றும் செலவு செய்வது இப்படிப்பட்ட கனிகளை அதிகமாக தருகிறார்கள். ஆனால் தங்கள் சுபாவமும், குணமும், இருதயமும், பேச்சும், செயலும், நடையும் இன்னும் மாறவில்லை. ஆகவே தான் யோவான்ஸ்நாகன் இப்படியாக அறைகூவல் இடுகிறார் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளை கொடுங்கள் என்று சொல்கிறார். ஜனங்கள் யோவான் ஸ்நானகனைப் பார்த்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவருக்குக் கொடுக்கக்கடவன். ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் மற்றும் ஞானஸ்நானம் எடுக்க வந்த ஆயக்காரரைப் பார்த்து, அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள். போர்ச்சேவகரைப் பார்த்து நீங்கள் ஒருவருக்கும் இடுக்கன் செய்யாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள் என்று யோவான் ஸ்நானன் இப்படியாக சொன்னார். நாமும் இப்படி செய்யும் போது மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கமுடியும்.

**இயேசு : மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது**

என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் – மத்தேயு 4:17

யோவான் ஸ்நானன் சொன்னது போல இயேசுவும் ஜனங்களைப் பார்த்து மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்தார். இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி சுகமாக்கினார். அருமையான தேவ ஜனமே மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது.

**தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் நம்முடைய கர்த்தராகியஇயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.** – அப்போஸ்தலர் 20:21

பவுல் வெகு மனத்தாழ்மையோடும் மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீமையான யோசனைகளால் நேரிட்ட சோதனைகளிலும் கர்த்தரை சேவித்தார். வெளியரங்கமாக வீடுகள்தோறும் பிரசங்கித்து உபதேசம் பண்ணி தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்து சாட்சியாக அறிவித்தார்.

## சாது சுந்தர் சிங் :

திபெத்தில் அவரது சாதனைகளை மட்டுமல்லாமல், சரீரத்திலே அவரை தாக்கினவர்களுக்கும் உபத்திரவப்படுத்தினவர்களுக்கும் மத்தியில் அவர் இயேசுவை காண்பித்தார். கங்கை நதிக்கரையில் அவர் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கும்போது ஒரு மனிதன் வேண்டுமென்றே அவரது கண்களில் மண்ணைத் தூவினான். மற்றொருவன் அவரை தரையிலே தள்ளி முகத்தில் காயம் உண்டாக்கினான். ஜனங்கள் மனம் திரும்ப வேண்டும். இரட்சிப்படையவேண்டும் இதுதான் அவரின் நோக்கம் மற்றும் மன்னிக்கிற குணம்,ஜெபிக்கிற குணம் இருந்தது.

அருமையான தேவ ஜனமே 2 தீமோ3-ம் அதிகாரத்தின் படி கொடிய காலங்கள் வரபோகுது. மனுஷர் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்படியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், அன்பில்லாதவர்களாயும்... இப்படியாக கொடிய காலங்கள் வரபோகுது நாம் மனந்திரும்பி இயேசுவிடம் போக வேண்டும். ஏசாயா 1:19,20இல் நீங்கள் மனம் பொருந்திச்செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்திற்கு இரையாவீர்கள். கர்த்தரின் வாய் இதைச் சொல்லுகிறது. வெளி 2:16ல் நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடு யுத்தம் பண்ணுவேன்.

## வாயின் பட்டயம் 1:

யோவான் பெர்கமு சபையின் தூதனுக்கு எழுதுகிறார். உன் செயல்களும் சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடி கொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவர் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.

1.விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசிப்பதற்கும்

2.வேசித்தனம் பண்ணுவதற்கும்

3.இஸ்ரவேல் புத்திரர் முன்பாக போடும்படி பாலாக் என்பவனுக்கு போதனை செய்த

பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு.
4.நிக்கோலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு.

அருமையான தேவ ஜனமே பெர்கமு சபையில் ஜனங்கள் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதே போலதான் நம்முடைய ஜனங்களும், சாத்தான் குடியிருக்கிற இடத்தில் குடியிருக்கிறார்கள், விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசித்து, வேசிதனம் பண்ணுகிறார்கள். அந்தி கிறிஸ்து உபதேசங்களையும் கேட்டு கொண்டிருக்கிறார்கள். இப்படி வாழ்ந்தால் வாயின் பட்டயத்தால் தான் யுத்தம் பண்ணமுடியும் மனந்திரும்புங்கள்.

## வாயின் பட்டயம் 2:

சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்து பரலோகத்தில் இயேசு அப்பா இருக்கிறார். இயேசு மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார், அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல் அவர் அவர்களை பிரித்து செம்மறியாடுகளை தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரிந்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்கு உணவு கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன் என் தாகத்தை தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்து கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன் என்னை பார்க்க வந்தீர்கள் அப்பொழுது கர்த்தருடைய பிள்ளைகள் கேட்பார்கள் ஆண்டவரே நாங்கள் எப்பொழுது உம்மை பசியுள்ளவராய் கண்டு உமக்கு போஜனம் கொடுத்தோம், எப்போது தண்ணீர் கொடுத்தோம், எப்போது உம்மை அந்நியராக கண்டு உம்மை சேர்த்துக்கொண்டோம், எப்போது வஸ்திரம் கொடுத்தோம், எப்போது வியாதியுள்ளவராகவும், காவலிலிருக்கறவராகவும் கண்டு உம்மிடத்தில் வந்தோம் அதற்கு இயேசு அப்பா மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன். அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய

அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன் நீங்கள் எனக்கு போஜனங் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தை தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரங் கொடுக்கவில்லை, வியாதியுள்ளவனாயும், காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன் நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை. அப்பொழுது அவர்கள் ஆண்டவரே, உம்மை பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி செய்யாமலிருந்தோம். அப்பொழுது இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

அருமையான தேவ ஜனமே மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது, மனந்திரும்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். ஆமென்

நன்றி: பாஸ்டர் பெத்தேல் சின்னையன்

## சபையின் வாக்குத்தத்தம் -2018

# என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்

எரேமியா 31:14

# வாலிபர் பகுதி

கர்த்தரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாலிப ஐக்கிய குழு சார்பாக உங்களை வாழ்த்துகிறோம். இந்த மாத வாலிபர் பகுதியில் ரூத் அவர்களை பற்றி பார்க்கலாம். ரூத் லோத்தின் வம்சத்தை சார்ந்தவள், ரூத் மோவாப் சந்ததியில் இருந்து வந்தவள் – ரூத் 1:4, தாவீதின் பூட்டி (பாட்டி) ரூத் –ரூத் 4:22

ரூத்தின் குணாதிசயங்களை பார்க்கலாம். மாமியாரை மிகவும் நேசித்து கனம் பண்ணின பெண் தான் ரூத் – ரூத் 1:16:17, ரூத் காலங்களை அறிந்து செயல்ப்பட்ட பெண், குடும்ப பொருப்பு உடையவளாய் இருந்தவள் – ரூத் 2:1–3, அதுமட்டுமல்லாமல் ரூத் தன்னை தாழ்த்துகிற பெண்ணாக தாழ்மையானவளாக வாழ்ந்தவள் – ரூத் 2:10, ஆகாரத்தை சேமிக்கும் பெண்ணாக இருந்தவள் – ரூத் 2:14, பெரியோர்களுக்கும், சான்றோர்களுக்கும் கீழ்ப்படிதல் உள்ள பெண்ணாக இருந்தவள் – ரூத் 3:1–5, கடைசியாக ரூத் ஒரு குணசாலியான உத்தமமான பெண்ணாக வாழ்ந்தவள் ரூத் 3:10–11,

ரூத் தேவனை நம்பும் பெண்ணாக எந்த இக்கட்டுகளிலும் தேவன் என்னை போஷித்து காத்து வழி நடத்துவார் என்று நம்பிக்கை உரியவளாயிருந்தாள். அந்த நம்பிக்கை அவளிடத்தில் எப்படி வெளிப்பட்டது நாம் ஆராய்ந்தோமானால் ரூத் லோத்தின் வம்சத்தை சார்ந்தவளாயிருந்தாள். கர்த்தர் வழிநடத்தின காரியங்களை அறிந்து இருந்தாள். லோத்து வாழ்க்கையை ஆண்டவர் எப்படி வழி நடத்தினார், ஆபிரகாமை எப்படி தேவன் ஆசீர்வதித்தார், ஈசாக்கு, யாக்கோபை எப்படி தேவன் ஆசீர்வதித்து வழி நடத்தினார் என்று ரூத் கட்டாயமாக அறிந்து இருப்பாள்.

இதை எல்லாம் அறிந்ததினால் ஆண்டவர் கைவிடுகிற தேவன் இல்லை சோதனை வழியில் நடத்தி அவர்களை பொன்னாக விளங்கப்பண்ணுகிறவர் என்பதை ரூத் அறிந்து இருந்ததினால் அன்று நகோமிக்கு ஏற்பட்ட கசப்பான வாழ்க்கையை தன்னுடைய வாழ்க்கையாக ஏற்றுகொண்டு அந்த கசப்பை மதுரமாய் மாற்றின ஒரு மதுரத்தின் மகள்தான் ரூத்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக! ஆமென்

வாலிப ஐக்கிய குழு

# உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் – ஏசாயா 55:2

உங்கள் ஆத்துமா கொழுப்பான பாதர்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் ஏசாயா 55:2 என்ற வேத வசனத்தின் படி, இந்த நன்மையை, ஆசீர்வாதத்தை நாம் எப்பொழுது பெற்றுக்கொள்ள முடியும், நம்முடைய ஆத்துமாவிலே ஒருவித தெய்வீக தாகமும், வாஞ்சையும் உண்டாகும்பொழுது மட்டுமே, இத்தகைய ஆசீர்வாதத்தினால் நாம் நிரம்ப முடியும்.ஏசாயா 44:3, 55:1 ஆகிய வேத வசனங்களில் "தாகம் உள்ளவர்களே தண்ணீரண்டை வாருங்கள்" என்ற அழைப்பை நாம் காண்கிறோம். அன்பானவர்களே, உங்கள் உள்ளத்திலே இவ்விதமான தாகம், வாஞ்சை ஆவிக்குரிய விதமாக எழும்பியிருக்கிறதா, என்பதை நாம் சோதித்துப் பார்ப்போம்.

இன்றைய நாட்களில் ஆண்டவருடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற பலருடைய வாழ்க்கையிலும்கூட, இவ்விதமான ஆவிக்குரிய தாகமோ அல்லது வாஞ்சையோ காணப்படுவதேயில்லை. அதற்கு பதிலாக, உலகத்தின் காரியங்களிலே தான் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஆகவே தான், மேற்கண்ட ஆசீர்வாதத்தை அவர்கள் பெற முடியாமல் பல்வேறு போராட்டங்கள், பிரச்சனைகள், தடுமாற்றங்கள் போன்றவற்றினால் அலைக்கழிக்கப்பட்டு, செய்வதறியாது திகைக்கிறார்கள். ஆனால் ஆண்டவருடைய வார்த்தை எவ்வளவு அழகாக விவரிக்கபட்டிருக்கிறது என்பதை பாருங்கள்.

"என்னை நோக்கிக் கூப்பிடு: அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." எரேமியா 33:3 என்ற வாக்குத்தத்தம் எத்தனை மகிழ்ச்சியை கொடுக்கிறது. ஆண்டவரை நோக்கி எல்லா நேரங்களிலும், எல்லாக் காரியங்களுக்காகவும் வேண்டுதல் செய்யும்பொழுதும், தாகத்தோடும், வாஞ்சையோடும் ஆசீர்வாதங்களை நாடித்தேடும்பொழுதும் நம்முடைய ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகிறது.

அன்பானவர்களே நாமும்கூட இப்படிப்பட்ட ஆவிக்குரிய தாகத்தோடும், வாஞ்சையோடும் கர்த்தரை உண்மையாய் தேடி, அவரை உறுதியாய் பற்றிக்கொள்ளுவோம் அப்பொழுது அவரே நமக்கு பரிகாரியாய், எல்லாவற்றிலும் எல்லாமுமாய் இருப்பார். அவரே உங்கள் ஆத்துமாவை கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாக்குவார். ஆமென்

சகோ.ஸ்டெல்லா தினகரன்

# 2018-2020 செயற்குழு உறுப்பினர்கள்
# ஊழிய பொறுப்பாளர்கள்



செயலாளர்
சகோ.ஆரோக்கியதாஸ்
99870126



சபை ஊழியர்
சகோ.ஸ்டாலின்
66021072



பொருளாளர்
சகோ.எபிநேசர்
66857827



வாலிப ஐக்கியக்குழு தலைவர்
சகோ.ஆரோக்கியராஜ்
66159784



பெண்கள் ஐக்கியக்குழு தலைவி
சகோதரி.பியூலா பால்ஜெகநாதன்
60797360



சகோ.ஜெயசேகர்
விதிமுறை கண்காணிப்பாளர்
66442727



சகோ.அசோக்குமார்
கணக்கு தணிக்கையாளர்
66826647



சகோ.ஏசுஇரத்தினம்
பாடல் குழு பொறுப்பாளர்
97252279



சகோ.ஜசக்துரை
செய்திமலர் பொறுப்பாளர்
66015503



சகோதரி.செலின் டேவிட்
ஓய்வுநாள் பாடசாலை பொறுப்பாளர்
66442727



சகோ.சுகுமார்
ஜெபக்குழு ஊழியபொறுப்பாளர்
66579514



சகோ.ஜாண்சன்
வாகனபோக்குவரத்து பொறுப்பாளர்
97610275



சகோ.ஜெபராஜ்
கேம்ப் ஊழியபொறுப்பாளர்
51781028



சகோ.கிறிஸ்டோபர்
திக்கற்ற பிள்ளைகள்
ஊழியபொறுப்பாளர்
67096449



சகோ.பிரசாத்
மிஷனரி ஊழியபொறுப்பாளர்
60781168



சகோ.பால்பாண்டியராஜ்
இணையதள பொறுப்பாளர்
66594586

சபைக்காகவும்,
சபையின் ஊழியங்களுக்காகவும்
ஜெபிப்போம்

## CHURCH POSTAL ADDRESS

Your Name
Post Box No:46795
Fahaheel - 64018
Kuwait

## CHURCH WEBSITE ADDRESS

www.ahmaditamilcongregation.org
E-Mail :- ahmaditamil.kw@hotmail.com

உங்களின் ஜெபதேவைகளை
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களோடு சேர்ந்து ஜெபிக்க
ஜெபகுழு ஆயத்தமாக இருக்கிறது

**Private Circulation only**